## இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு திட்டம் - II (i-வீதி - II) - 2020

---

இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு திட்டம் - II (i-வீதி - II) இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த கணக்காண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 நொவம்பர் 22 ஆந் திகதி 3579–எஸ்ஆர்ஜ மற்றும் 3580–எஸ்ஆர்ஜ (சீஓஎல்) மற்றும் 2019 நொவம்பர் 13 ஆந் திகதி 3851–எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரிவு 4.03 இன் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கிராமப்புர சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையிலான வீதிகளின் அடயக்கூடிய தன்மையினை அதிகரித்தல் கருத்திட்டத்தின் குறிக்கோள்களாகும். தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து திறனை அதிகரிப்பது நீண்டகால தாக்கமொன்றாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 165,185 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1,084.60 மில்லியனானதுடன் அதில் ரூபா 137,070 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 900 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை பா 28,115 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 184.6 இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நிதித்திட்டம் பலதரப்பட்ட நிதி வசதிகளின் கீழ் ஐந்து பொறிகளை கொண்டிருந்ததுடன் அதில் ஐ.அ.டெலர் 300 தொகையான முதல் இரண்டு பொறி உடன்படிக்கைகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் வழங்கும் முகவருடன் கையொப்பமிடப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2018 ஜுலை 20 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2027 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

---

செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தய-ாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | ரூபா | | |
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 05 இன் பந்தி 36 இற்கு முரணாக, வெளிநாட்டு செயற்பாடுகள் மூலம் எழுந்த நாணயமாற்று வித்தியாசம் செயற்திட்டத்தின் தேறிய சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 75.8 மில்லியன் | அடுத்த வருட செயற்திட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அதனை சரிசெய்ய கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | வெளிநாட்டு செயற்பாடுகள் மூலம் எழுந்த நாணயமாற்று வித்தியாசம் செயற்திட்டத்தின் தேறிய சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 2.2 இணக்கஞ் செய்யப்படாத மீதிகள்

| நிதிக்கூற்றுகளின் படி பெறுமதி | தொடர்புடைய ஆவணங்களின் படி பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் பொறுப்பு | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | | |
| ரூபா 27,865.9 மில்லியன். | பொது திறைசேரியின் பிரகாரம் ரூபா 32,895.6 மில்லியன்.<br>வெளி வளங்கள் திணைக்களத்தின் பிரகாரம் 28,762.7 மில்லியன். | ரூபா 5,029.7 மில்லியன்.<br>ரூபா 896.8 மில்லியன். | கணக்கிணக்கங்கள் 2021 இலிருந்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | தொடர்புடைய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்படல் வேண்டியதுடன் வேறுபாடுகள் குறைக்கப்படலும் வேண்டும். |

### 2.3 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த குறித்த நிபந்தனையின் உப பிரிவு 14.6 | ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் குறைந்தபட்ச பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 1.5 சதவீதமாகும். இருப்பினும், மீளாய்வண்டின் போது 50 பொதிகளின் கீழான இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களை பரிசீலனை செய்யும் போது 259 விடயங்கள் தேவையான நிபந்தனையிற்கு கீழாக காணப்பட்டமை | கோவிட் 19, பாதகமான காலநிலை, மூலப்பொருட்களின் குறைபாடுகள் போன்ற காரணங்களே ஒப்பந்ததாரரிற்கு மேலதிக கிரயம் ஏற்படுவதன் பெறுபேறாகலாம். உண்மையான நிபந்தனைகளை நாங்கள் கடைப்பிடித்தால் ஒப்பந்ததாரர்களின் காசுப்பாய்ச்சல் | கிரயம், நேரம், மற்றும் ஒப்பந்ததாரரிற்கான தேவையற்ற நன்மைகளை குறைப்பதற்கு ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களை கடைப்பிடித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவதானிக்கப்பட்டது. | பாதிப்படைவதுடன், அவர்கள் குறைந்த செயலாற்றலை கூட அடையமுடியாமலிருக்கும். | |
| (ஆ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரம் ஒப்பந்ததாரரினால் அவரது சொந்த செலவில் வழங்க வேண்டியிருந்தும், மொத்தமாக ரூபா 85.64 மிரல்லியன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் மீதான கிரயத்தினை மீளபெற்றுகொள்வதற்கு ஊவா மாகாணத்திலுள்ள ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | பொது நிபந்தனை மாற்றியமைக்கப்பட்டிருந்ததுடன் பீஓகியுவ்விலுள்ள அந்த கொடுப்பனவு உருப்படி கிழக்கு, வடக்கு மற்றும் மேல் மாகாணங்களின் பொதிகளில் நீக்கப்பட்டுமிருந்தது. | அளவைப்பட்டியலின் பரிசீலனை விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் பெறுகை நிபுணர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்த குறித்த விடயங்களின்/ நிபந்தனைகளின் உபபிரிவு 119.1(1),(2) மற்றும் (3) | வேலைகள், உபகரணம;, மூன்றாம் நபர்கள், ஆதனங்கள், வேலையாட்களின் இழப்பீடு மற்றும் தொழில்சார் இழப்பு காப்பீடு என்பன 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிடி 02 மற்றும் பிடி 03 பொதிகளின் ஒப்பந்ததாரரினால் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்தங்களின் பொது மற்றும் சிசேட நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட படி குறித்த நிபந்தனையுடன் தொடர்புபட்ட அனைத்து காப்புறுதிகளும் ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த குறிப்புகளில் ஒப்புதலலித்த படி ஒப்பந்ததார்களிடமிருந்து தேவையான காப்புறுதிகளை பெற்றக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2017 மார்ச் 15 ஆம் திகதிய பெறுகை கைநூலின் பிரிவு 4.2.3 இற்கான பின்னினைப்பு 31 | பெறுகை நடவடிக்கைகளிற்கான உயர்ந்தபட்ச காலம் தேசிய மற்றும் சர்வதேச விலை மனுவிற்கு 15 வாரங்களாகவிருந்தும், வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள கட்டுமான வேலைக்கான பெறுகைகளிற்கான பெறுகை செயற்பாட்டு காலம் 25 வாரங்கள் தொடக்கம் 38 வாரங்கள் என்ற வீச்சில் நியம நேர காலத்தை மிஞ்சியிருந்தது. | பெறுகை நடவடிக்கைகள் பெறுகை நேர அட்டவனையின் பிரகாரம் திட்டமிடப்பட்டது. இருப்பினும், சில நடவடிக்கைகள் பெறுகை குழுவின் மீள் நியமனம், விலை மனு முடிவுத்திகதியின் நீடிப்பு, விலைமனு விலையின் பேரம்பேச்சு போன்ற கட்டுப்பாட்டிற்கு அப்பால்பட்ட காரணங்கள் காரணமாக தாமதமாகியிருந்தது. | பெறுகை நடவடிக்கைகள் ஒப்புதலலிக்கப்பட்ட நேர காலத்திற்குள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |
| (உ) | 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மானத்துறை அபிவிருத்தி சட்டம். | வெளிநாட்டு ஒப்பந்ததாரர்கள் இலங்கையிலுள்ள ஏதாவது அடையாளப்படுத்தப்பட்ட நிர்மான வேலையில் ஈடுபடுவதற்கு முன்பு நிர்மான துறை அபிவிருத்தி சபையில் (சீஐபீஏ) ஓர் ஒப்பந்ததாரராக தற்காலிக பதிவினை பெற்றிருத்தல் வேண்டும். இருப்பினும், நிகழ்ச்சித்திட்டமானது 09 ஒப்பந்ததாரர்களுடன் தொடர்புபட்ட சில ஒப்பந்தங்களின் கையளிப்பிற்கு முன் சீஐபீஏ வின் பதில் தேவைப்பாட்டினை கவனத்தில் கொண்டிருக்காமை | சீஐபீஏ பதிவு தேவைப்பாடு எடீபீ (ADB) இன் வழிகாட்டிகளின் பிரகாரம் விலைமனு கோரலிற்கு அவசியமிலலை. எனவே, அது விலைமனுவின் போது கவனத்தில் கொள்ளப்படவில்லை. விலைமனுதாரர்கள் தனிப்பட்ட ரீதியில் சீஐடீஏ வில் பதிவு செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்வதற்கு முன்னர் ஒப்பந்ததாரரின் தரப்படுத்தல் செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவதானிக்கப்பட்டது. | | |
| (ஊ) | 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டம் | ரூபா 5 மில்லியனிற்கு அதிகமான பெறுமதி கொண்ட பொது ஒப்பந்தங்களின் விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை சேகரிக்கும் முன்னர் பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்த பதிவினை கூட பெற்றிருத்தல் வேண்டும். செயற்திட்டமானது உரிய விலைமனுதாரர்களின் தொழிநுட்ப விலைமனுவினை பரிசீலிக்கும் போது அத் தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தசட்டத்தின் பதிவு செய்தல் தேவைப்பாடு கவனத்தில் கொள்ளப்பட்டது. இருப்பினும், எடிபீ இன் வழிகாட்டிகளின் பிரகாரம் இது ஒரு தகுதியற்ற அடிப்படையாக கவனத்தில் கொள்ள முடியாது. | விலைமனுதாரர்கள் மற்றும் கையளிக்கப்பட்ட ஒப்பந்தம் என்பன பொது ஒப்பந்த நட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| இல | கூறுகள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் கையளிப்பு. | வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மேல் மாகானங்களிலுள்ள 27 தேசிய வீதிகளின் 340 கி.மீ கள் மற்றும் 1,405 கிராமிய வீதிகளின் 3,400 கி.மீ களின் வீதி புனர்நிர்மான வேலைகள் ஆரம்பகட்ட திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தினால் 53 பொதிகளின் கீழ் புனரமைக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தும், 27 தேசிய வீதிகளின் 319.96 கி.மீகள் மற்றும் 1,349 கிராமிய வீதிகளின் 3,313.16 கி.மீகள் மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையளிக்கப்பட்டிருந்தது. | ஆரம்பத்தில் தெரிவு செய்யப்பட்ட சில வீதிகள் அவ்வீதிகள் வேரொரு செயற்திட்டத்தின் கீழ் மேம்படுதப்பட்டதனால் கைவிடப்படவேண்டியிருந்தது. மேல்மாகாணத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் 73 கி.மீ தவிர்ந்த, அனைத்து மீதமாக உள்ள வீதிகளும் உரிய திகதியில் கையளிக்கப்பட்டிருந்தன. | நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப திட்டத்துடன் இணங்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உரிய காலத்தில் இலக்கினை அடையவும் வேண்டும். |
| (ஆ) | தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்கல். | மொத்த நீளம் 25.05 கி.மீஇனை உள்ளடக்கிய 13 கிராமிய வீதிகள் மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிரந்தது. மேலும், மிகுதி நடைமுறையிலுள்ள வீதி புனரமைப்புக்களில், தேசிய வீதிகளின் 39.97 கி.மீ மற்றும் | வீதிகள் நிர்மானம் மற்றும் செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்பு வேலைகள் என்பன பூர்தியானதும் கையளிக்கப்படும். மேலும், வடக்கு மாகாணத்திலுள்ள கையளிக்கும் ஒப்பந்தங்கள் போதுமான பாதீட்டு ஒதுக்கீடு இல்லாததன் காரணமாக ஒரு வருடத்திற்கு மேலாக | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிராமிய வீதிகளின் 731.62 கி.மீகள் மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. எனவே, மொத்தமாக கையளிக்கப்பட்ட தேசிய மற்றும் கிராமிய வீதி நீளங்களில் 21.93 சதவீதத்தினை மாத்திரமே இது பிரதிநிதித்துவப்படுத்தியது. | தாமதமடையக்கூடும். கடன் காலம் காலாவதியாவதற்கு முன்னர் அனைத்து வீதிகளையும் எங்களால் பூர்த்தி செய்ய முடியும் என நாங்கள் நிச்சயிக்கின்றோம். | |

**3.2 செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுல்படுத்தல் மற்றும் பூர்த்தியாக்களில் தாமதம்**

| விபரம் | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) வீதி புனரமைப்பின் கட்டுமான வேலைகளின் ஆரம்பிப்பு. | ஒப்பந்த பொதிகள் கையளிக்கப்பட்ட பின்னர் கட்டுமான வேலைகள் ஒப்பந்ததாரரினால் அவசரமாக ஆரம்பிக்கப்பட வேண்டி இருந்தும், 37 ஒப்பந்த பொதிகள் கட்டுமான வேலைகளை ஆரம்பிப்பதற்கு 30 நாட்கள் தொடக்கம் 203 நாட்கள் என்ற வீச்சிலான காலம் தாமதித்திருந்தது. அத்தாமதத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பிப்பு திகதி நிர்ணயிக்கப்படும் வரை, ஒப்பந்ததாரர் நிலஅளவை, புலனாய்வு மற்றும் வடிவமைப்பு வேலைகளை ஆரம்பிக்க முடியாது. | ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக கட்டுமான வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) உபகரரணங்களின் பெறுகை நடைமுறை | செயற்திட்டத்தின் பெறுகை திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட அமுல்படுத்தல் திட்டம் என்பனவற்றின் பிரகாரம், ஐ.அ.டொலர் 2,230,000 மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 06 உபகரண பெறுகை நடைமுறைகளின் விலைமனு விளம்பரத்தினை பூர்த்தி செய்ய திட்டமிட்டிருந்தும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவைகளில் எவ்வித பெறுகைகளும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் மிருதுவான செயற்பாடுகளிற்கு தேவையான முக்கியமான உபகரணங்களை கருத்தில் கொண்ட பின்னர் பெறுகை நடைமுறைகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, உபகரண தேவைப்பாடு முடிவாக்கப்பட்டதுடன் பெறுகை நடவடிக்கை 2021 இரண்டவது காலாண்டில் ஆரம்பிக்கப்படும். | நிகழ்ச்சித்திட்டத்தின் மிருதுவான செயறபாட்டிற்கு தேவையான உபகரணம் உரிய நேரத்தில் கொள்வனவு செய்யப்படல் வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொறியியலாளர் மதிப்பீடு, விலைமனு ஆவணங்கள் மற்றும் அளவைகள் பட்டியல் என்பன அரச பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக்குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தும், மேற்கூறிய வழிகாட்டிற்கு முறணான நடவடிக்கைகள் பின்வருமாறு; | | |
| | (i) ரூபா 48.2 மில்லியன் நட்டம் பொறியியலாளர் மதிப்பீடுகள், விலைமனு ஆவணங்கள் மற்றும் அளவைகள் பட்டியல் என்பவற்றில் விகித முறண்பாடுகள் மற்றும் பிழையான விளக்கம் என்பவற்றின் காரணமாக பீஎ 4 மற்றும் பீஎ 5 ஒப்பந்த பொதிகள் சார்பில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | பீஎ 4 மற்றும் பீஎ 5 ஒப்பந்தங்களின் மதிப்பிடப்பட்ட விலை மனுவின் விலை நியாயமானதாக கண்டறியப்பட்டது. எஸ்சீஎபிசி மற்றும் டீஈசி எடீபீ இன் மதிப்பீட்டு வழகாட்டிகளின் ஏற்பாடுகளிற்கு விலைமனுக்களை மதிப்பிட்டது. | நட்டத்தினை மீளப்பெற நிகழ்ச்சித்திட்டததினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) எம்01, எம்02 மற்றும் எம்03 பொதிகளுடன் தொடர்புபட்ட பொறியியலாளர் மதிப்பீட்டிற்கும் அளவைப்பட்டியல்களிற்கும் இடையே பல்வெறு ஆரம்ப கட்ட உருப்படிகளில் விகித முரண்பாடுகள் காணப்பட்டன. 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட மொத்தமாக ரூபா 1,035 மில்லியன் மாறல்கள் அம் 03 பொதிகள் தொடர்பில் அவதானிக்கப்பட்டது. | பொறியியலாளரின் மதிப்பீடு நெடுஞ்சாலைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட எச்எஸ்ஆர் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. இவ் விகிதங்கள் தேசிய நெடுஞ்சாலைகளின் நிரமான வேலைகளிற்கு பயன்படுத்தப்படும். எனவே, பொறியியலாளர் மதிப்பீடு மற்றும் விலைமனுக்களின் விலை மாறல்களை தவிர்க்க முடியாது. | யதார்த்தமான முறையில் பொறியியலாளர் மதிப்பீடுகளை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அனைத்து ஆய்வுகூடம், தளபாடம் மற்றும் சில அளவை உபகரணங்கள் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட முடிவில் ஒப்பந்ததாரரிற்கு திருப்பி அனுப்பட வேண்டியிருந்தும், 2020 திசெம்பர் | திருப்பியனுப்பப்பட்ட சொத்துக்களில் இழிவுப்பெறுமதிகள் விலைமனு பெறுமதிகளை குறைக்க நேரிடும். மேலும், இவ் உருப்படிகள் அவைகளை 2 - 3 வருடங்களிற்கு மேலாக பாவித்ததன் பின்னர் ஒப்பந்த முடிவில் அனேகமாக | ஒரு பொது நடைமுறையாக, உரிய சொத்துக்கள் தொழில் வழங்குனரால் தக்கவைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான ஒப்பந்ததாரரின் கிரயம் ஏனைய நன்கொடை வழங்கும் |

| | | | |
|---|---|---|---|
| | 31 இல் உளளவாறு மொத்தமாக ரூபா 593 மில்லியன் மற்றும் ரூபா 16.23 மில்லியன் ஒட்டுமொத்தமாக முறையே ஆய்வுகூடம் தளபாடம் மற்றும் நிலஅளவை உபகரணங்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இதனால் அசாதாரண ஒப்பந்த நிபந்தனைகள் ஒப்பந்ததாரர்களிற்கு தகாத நன்மைகளை ஏற்படுத்தலாம் என்பதை அது சுட்டிக்காட்டலாம். | பயன்படுத்த முடியாமல் அல்லது காலம் கடந்த நிபந்தனையாகலாம். | செயற்திட்டத்தினால் கையளிக்கப்பட்ட ஏனைய ஒப்பந்த பொதிகளின் கிரயத்துடன் ஒப்பிடும் போது குறைக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி புனரமைப்பு செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கிழக்கு மாகாணத்திலுள்ள ஆறு வீதிகள் வசதி நிர்வாக கையேட்டிலோ தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிற்கு கையளிக்கப்பட்ட தொடர்புடைய ஒப்பந்த பொதிகளின் கீழோ உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே எடீபீ மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சம்மதம் புதிதாக சேர்க்கப்பட்ட வீதிகளிற்கு செயற்திட்டத்தினால் பெறப்பட்டதா என்பதனை கணக்காய்வினால் உறுதிப்படுத்த முடியாமல் போகக்கூடும். மேலும், அவ் ஒப்பந்தங்களின் கையளிப்பு முறைகள் மற்றும் கடன்வழங்கும் முகவரிடமிருந்தான வேலைப்பரப்பு மாற்றங்களிற்கான அனுமதி கிடைக்கப்பெறவில்லை. | எடீபீ வின் அனுமதியினை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேலைப்பரப்பு கடன் வழங்கும் முகவர் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் சம்மதத்தின் பின்னரே மாற்றம் செய்யப்படல் வேண்டும். |

**3.4 வெளிக்கள விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்.**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | ---------------------- | ----------------------------------- | --------------------------- |
| (அ) | ஐசிடிஎடீ (ICTAD) இனை வெளியிடப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்களின் நிர்மானம் மற்றும் பராமரிப்பிற்கான நியம நிபந்தனைகளின் (எஸ்சிஎ/5) உபபிரிவு 506.5(ஏ) பிரகாரம், compacted surface cource இலிருந்து எடுக்கப்பட்ட அனைத்து மாதிரிகளினதும் அடர்த்தி இடங்களிற்கு அண்ணளவாக்கப்பட்ட மையத்தில் மார்சல் அடர்த்தி 97 சதவீதத்திற்கு குறைதல் கூடாது. இருப்பினும், முறையே கேஎல் 4 | கேஎல் 04 இன் திருத்த வேலைகள் 2021 மார்ச் 09 இல் நேரத்திற்கு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே எவ்வித கொடுப்பனவுகளும் பொறியியலாளரினால் பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், கேஎல் 113 ஏ இன் திருத்த நடவடிக்கைகள் 2021 மார்ச் 01 இல் திருப்திகரமாக முடிவுறுத்தப்பட்டிருந்தது. | ஐசிடிஎடீ இனால் வெளியிடப்பட்ட வீதிகளின் நிர்மானம் மற்றும் பராமரிப்பிற்கான நியம நிபந்தனைகளுடன் கண்டிப்பாக உடன்படவேண்டியதுடன் ஒப்பந்ததாரர்களினால் திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரை கொடுப்பனவுகள் செய்யப்பட கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கேஎல் 6 ஒப்பந்த பொதிகளின் கீழான வளன – பெக்கெகம – கொரன வீதி (227) மற்றும் கொத்தலாவ வீதி (113ஏ) விலுள்ள அடித்தளம் மேற்கூறிய நியமங்களுடன் உடன்படாத நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | கேஎல் 06 பொதியின் கீழான 4.78 கி.மீ நீளமுடைய கொத்தலாவ கிராமிய வீதி (மேலதிக) (வீதி-ஐடி-113ஏ) அக்கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்பட்டிராததுடன் மேலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2020 திசெம்பர் மாதத்திற்கான செயலாற்றல் அறிக்கையில் அது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே எடீபி மற்றும் ஒப்பந்ததாரரின் தெரிவு செய்தல் முறை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொழில் வழங்குனரினால் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் 2021 சனவரியின் செயலாற்றல் அறிக்கையில் வேறாக காட்டப்பட்டது. | செயற்திட்ட வேலைப்பரப்பு கடன் வழங்கும் முகவர் மற்றும் திறைசேரியின் சம்மதத்தின் பின்னரே மாற்றம் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | வடிகான்கள் கேஎல் 06 இன் கீழான வீதி ஐபீ இல 113ஏ பொத்தலாவ வீதி (மேலதிக) இல் அடித்தளம் (Wearing Cource) ஈடுவதற்கு முன் வீதியின் கடினமான பகுதிகளில் இரு பக்கங்கள் கூட நிர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, எதிர்காலத்தில் இயந்திரங்களை பயன்படுத்தி வடிகான்களிற்கு மண் அகழ்வு செய்யும் போது நிலக்கீழ் அடுக்கு பாதிப்படையலாம். 0+990 எனுமிடத்தில் ஒரு நிலக்கீழ் பாலத்தினை நிர்மானிக்க செயற்திட்டம் திட்டமிட்டிருந்தும், ஒரு கான்கிரீட் ஹியூம் குழாய் மாத்திரமே ஹியூம் குழாயை சுற்றி கான்கிறீட் இல்லாமல் செய்யப்பட்டிருந்தது. மேலும், காபட் அடுக்கு தளத்தின் இருபக்கமும் கான்கிரீட் நிலக்கீழ் தளத்திற்கு இடம்விடாமல் ஏற்கனவே காபட் அடுக்கு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இவ் வீதி மிகவும் முன்னுரிமை வழங்கப்பட்டது. எனவே காபட்டின் மேல்பகுதி வடிகான்கள் மற்றும் நிலக்கீழ் பாலம் பூர்த்திசெய்வதற்கு முன் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். மீதமாகவுள்ள வேலைகள் ஒப்பந்ததாரரினால் செய்யப்பட்டிருந்தது. | நிர்மானங்கள் விசேட நிபந்தனைகளுடன் கண்டிப்பாக உடன்படல் வெண்டும். |

### 3.4 புறநடையான கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| ---------------------------------- | ----------------------------- | ------------------------- |
| ரூபா 243.48 மில்லியன் தொகையான ஒப்படைப்பு கட்டணங்கள், மீளாய்வாண்டின் போது மீளப்பெறப்படாத பெறுவனவுகள் மீது | ஒப்படைப்பு கட்டணங்களின் கொடுப்பனவை அது ஒரு சிக்கனமற்ற கொடுப்பனவாக இருப்பினும் தவிர்க்க | தேவையற்ற கிரயங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| கடன் வழங்கும் முகவரிற்கு சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரான திரட்டிய ஒப்படைப்பு கட்டணங்கள் ரூபா 449.51 மில்லியனாகும். | முடியாததாகும். ஆனால் மீளப்பெறல் இலக்குகளை அடைவதனூடாக அதனை குறைக்க முடியும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்ர்பட்ட விடயங்கள்

| வெற்றிடங்கள் | பதவிகளின் எண்ணிக்கை | | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | கணக்காய்வாளர் பரிந்துரைகள |
|---|---|---|---|---|---|
| | அனுமதிக்கப் பட்டவை | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவறு உண்மை | வெற்றிடங்க ளின் எண்ணிக்கை | | |
| சிரேஸ்ட பொறியியலாளர் | 6 | 1 | 5 | செயற்திட்ட செயலாற்றல் மீதான ஏதாவது பாதகமான நடவடிக்கை எடுக்கபபட்டிருந்தது. மேலும், ஆர்டிஏ விற்கு வெளியுள்ள உத்தியோகத்தர்களை நயமிப்பதன் மீதான வரையறைகள் இவ் நியமங்களை செய்வதில் தாமதத்தை ஏற்படுத்தியிருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றலை குறைக்க உகந்த வெற்றிடங்கள் நிகழ்ச்சித்திட்டத்தினால் பராமரிக்கப்படல் வேண்டும். |
| ஒருங்கினைப்பு பொறியியலாளர் | 14 | 4 | 10 | | |
| செயற்திட்ட பொறியியலாளர் | 28 | 20 | 8 | | |
| செயற்திட்ட கணக்காளர் | 4 | 2 | 2 | | |

### 3.6 செயற்திட்ட கண்காணிப்பு பிரிவுடன் தொடர்புபட்ட விடயங்கள்

| இல | பிரதான வெற்றிட நிலைகள் | பீஎம்யூ வில் சேவைக் காலம் | வேறு நிறுவனங்க ளில் வேலை செய்தாரா | ஒப்பந்த அடிப்படையி லா/பதில் அடிப்படையி லா வேலைசெய் தார் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட பணிப்பாளர் (ஊவா). | 01 மாதம் | ஆம் (வீதி அபிவிருத்தி அதிகார சபை) | பதில் அடிப்படை | இது ஓர் தற்காலிக அளவீடாக பதில் அடிப்படையில் நியமிக்கப்பட்டதுடன் செயற்திட்ட பணிப்பாளரினை ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. | செயற்திட்ட பணிப்பாளர் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் எப்பொழுதும் முழுநேர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்ட கணக்காளர். | 02 வருடங்களிற்கு மேலாக. | ஐ வீதி நிகழ்ச்சித் திட்டத்தில் ஓர் கணக்காளராக வேலை செய்கிரார் | பதில் அடிப்படை. | இந்நியமனம் ஐ வீதி 1 இன் கணக்காளரின் சேவை ஓர் வினைத்திறனானதால் பதில் அடிப்படையில் செய்யப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்புக்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியுடன் இணங்க வேண்டும். |

### 3.7 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் வசதி நிர்வாக கையேடு மற்றும் 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்தவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரிவு 9 என்பவற்றின் பிரகாரம், ஒவ்வொரு மாகாணத்திலும் செயற்திட்ட வழிகாட்டும் குழு மற்றும் மாகான ஒருங்கினைப்பு குழு கூட்டம் செயற்திட்ட அமுல்படுத்தலினை மேற்பார்வை, கண்கானிப்பு மற்றும் ஒருங்கினைப்பு செய்ய ஆகக்குறைந்தது காலாண்டிற்கு ஒருமுறை நடாத்தப்படல் வேண்டும். இருப்பினும், அவ் இரண்டு குழு கூட்டங்களும் உகந்த அடிப்படையில் அதன்படி செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | கோவிட் பரவல் காரணமாக தற்போதைய காலத்தில் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. | அனைத்து வழிகாட்டல் குழுக்களும் நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் அமுல்படுத்தப்பல் வேண்டும். |